கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs

வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council

செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය

Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com


| | | |
|---|---|---|
| எனது இல. / මගේ අංකය / My No. சுற்றுநிருப இல: 2015/05 | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date 19-05-2015 |

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

## வட மாகாண பாடசாலைகளில் நியமன, இடமாற்ற விதிகளை நடைமுறைப்படுத்தல்

இச் சுற்றறிக்கையானது, வட மாகாண பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களின் இடமாற்றம், நியமனம் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் தொடர்பான கீழ்வரும் விதிமுறைகளை 11.05.2015 இலிருந்து வட மாகாணத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்படுகின்றது. ஆகவே, கீழே தரப்பட்ட விதிமுறைகளை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

1. வட மாகாணத்திற்குட்பட்ட சகல மாகாண பாடசாலை அதிபர்களின் இடமாற்றம் வட மாகாண கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். மற்றும் அனைத்து வட மாகாண பாடசாலை பிரதி அதிபர்களின் நியமனம் வட மாகாண கல்விப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. நிரல் கல்வி அமைச்சின் ED/03/w;s.f,a./0ie,iquS/163 இலக்க, 02.12.2014ஆந் திகதிய கடிதத்தின் படி தொண்டர் ஆசிரியர் மற்றும் கல்வி சாரா ஊழியர்களை வட மாகாணப் பாடசாலைகளில் அதிபர்களினால் நியமனம் செய்தல் மற்றும் உள்ளீர்த்துக்கொள்ளல் என்பன உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3. மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருப்பின், மூன்று(03) மாதங்களுக்குள் தேசிய பாடசாலைகளுக்கு விடுவிக்கப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் எவ்வாசிரியர்களும் தேசிய பாடசாலைகளுக்கு விடுவிக்கப்பட மாட்டார்கள்.

4. ஆசிரியர் இடமாற்றம் வருடத்தின் தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். எந்தவொரு ஆசிரியரையும் பாடசாலைத் தவணை தொடங்கிய பின்னர் இடமாற்றம் செய்யப்படல் ஆகாது. அவசர தேவை கருதி இடமாற்றம் செய்யவேண்டின் இடமாற்ற விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, அடுத்த தவணை ஆரம்பத்திலிருந்து செயற்படும் வண்ணம் தவணை விடுமுறைக் காலத்திலேயே இடமாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

1. மாகாண கல்விப்பணிப்பாளர், வடக்கு மாகாணம்.


| | | |
|---|---|---|
| செயலாளர் / ලේකම් / Secretary: 021-2219259 | அலுவலகம் / කාර්යාලය / Office: 021-3202704 (Admn.), 021-3202568 (Dev.), 021-3202281 (Plan.), 021-3202309 (Acct.), 021-7390665 (DSW) | தொலைநகலி / ෆැක්ස් / Fax: 021-2220794 |